RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் கல்விச் சிந்தனை

கொ. சிவசங்கரன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருநின்றவூர், சென்னை-602024, இந்தியா

# Educational Perspectives in the Novels of Rajam Krishnan

K. Sivasankaran [a, *]

[a] Department of Tamil, Jaya College of Art and Science, Thirunindravur, Chennai-602024, India

* Corresponding Author:
sankarvijayatamil@gmail.com

Received: 10-11-2025
Revised: 27-02-2026
Accepted: 05-03-2026
Published: 16-03-2026

Check for updates

## ABSTRACT

Society is an organized system in which individuals live together through shared relationships, institutions, and social structures. It comprises diverse social groups whose interactions shape collective life and influence individual development. Social problems emerge from one or more structural, economic, and cultural factors, affecting the lives of individuals in different ways. Among these factors, access to education remains one of the most significant determinants of social progress and equality. Literary writers possess a unique ability to observe society with sensitivity, interpret its complexities, and transform everyday experiences into meaningful artistic expression. Their works reflect not only the realities of the external world but also their personal insights, social concerns, and ideological perspectives. Through fiction, authors reveal the inequalities embedded in society and encourage readers to reflect upon the need for social reform. Rajam Krishnan, one of the prominent voices in modern Tamil literature, consistently addresses the struggles of marginalized and economically disadvantaged communities in her novels. She vividly portrays how education remains an unattainable aspiration for many people born into poverty, exposing the social and economic barriers that prevent equal educational opportunities. At the same time, her novels present education as a powerful instrument for individual empowerment, social mobility, and the eradication of inequality. This article examines the educational thought reflected in the novels of Rajam Krishnan, exploring how she represents the relationship between education and social justice. The study highlights her vision of education as a means of empowering the underprivileged, challenging oppressive social structures, and fostering an equitable and progressive society.

**Keywords:** Rajam Krishnan, Social justice, Rajam Krishnan novels, Ideological perspectives, Educational Perspectives

## முன்னுரை

தனிமனிதன் ஓர் ஒழுங்கின் அடிப்படையில் சேர்ந்துள்ள அமைப்பே சமுதாயம் எனக் கூறப்பட்டது. சமுதாய அமைப்பு பல்வேறு குழுக்களை உள்ளடக்கியது. ஓர் அமைப்பின் கீழ், ஒருவருடன் ஒருவர் தொடர்புகொள்கின்ற மனிதர்களின் சேர்க்கையே சமூகக்குழு எனப்படும். சமுதாயச் சிக்கல் ஒன்று அல்லது பல காரணிகளால் உருவாகின்றது.

சாதாரண மனிதர்களை விடப் படைப்பாசிரியர்கள் தாம் காணும் ஒவ்வொரு காட்சியையும் கூர்ந்து நோக்கும் திறமும், அதைப்பற்றிச் சிந்திக்கும் வல்லமையும், அவற்றோடு கற்பனையைக் கலக்கும் ஆற்றலும் மிக்கவர்கள். எல்லோருக்கும் பொதுவான வாழ்க்கை நிகழ்ச்சிகளும், புறஉலக நடப்புகளும் அவர்கள் கை வண்ணத்தில் இலக்கியமாகின்றன. அவற்றில் ஆசிரியரின் எண்ணங்களும், வாழ்க்கை நுகர்வுகளும் அவர்கள் அறிந்தோ, அறியாமலோ தம் தாக்கத்தை வெளிப்படுத்தி அமைகின்றன. சமூகத்தில் ஏழையாக பிறந்தவர்களுக்கு கல்வி எப்படி எட்டாக்கனியாக அமைந்துள்ளது

என்பதை நாவலாசிரியர் காட்டுகிறார். அவ்வகையில், இராஜம் கிருஷ்ணன் தம் நாவல்களில் கல்விச் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

பழந்தமிழர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதனை இலக்கியங்களின் வாயிலாக அறியலாம். கல்வி மனிதனை மனிதனாக்குகிறது. கல்வி கற்றலின் அவசியத்தை அறிந்த கிழார்,

"குலன் உடைமையின் கற்புச் சிறந்தன்று"1

எனக் கல்வி கற்றவர்கள் எக்குலத்தில் பிறந்தவராயினும் அவர்கள் உயர்ந்தவர்களாவார்கள். கல்லாதவர்கள் எக்குலத்தில் பிறந்திருந்தாலும் அவர்கள் இழிந்தவர்களாக கருதப்படுவார்கள் என்று கூறுகிறார். இதனையே திருவள்ளுவரும்,

"மேற்பிறந் தாராயினும் கல்லாதார் கீழ்கிறந்தும்

கற்றார் அனைத்திலார் பாடு"2

எனக், கல்வி கற்றால் மட்டும் போதாது; கற்ற கல்வியை என்றும் மறவாது இருத்தல் வேண்டும். அதனை,

"மேதையின் சிறந்தன்று, கற்றது மறவாமை"3

என, அதிகமான நூல்களைக் கற்று பேரறிவுடையவன் என்பதைக் காட்டிலும், படித்த கல்வியை மறவாது இருத்தல் சிறந்ததாகும் என்கிறார்.

## கல்வியும் ஒழுக்கமும்

ஒழுக்கவிதிகள் மக்களை நன்னெறிக்கண் வழிநடத்திச் செல்கின்றன. கல்வியின்றி அறியாமையில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு ஒரு கைவிளக்காக அறிவினைப் புகட்டுகின்றன. நன்னடத்தை இல்லாமல் தவிப்பவர்களுக்கு அறிவுரைகளைப் புகட்டும் ஊன்றுகோலாக அமைகின்றன. ஒழுகு என்னும் அடிச்சொல்லிற்கு 'நட' என்னும் பொருளும் உண்டு. இதனால், ஒழுக்கம் என்பது நடத்தை எனவும் பொருள்படும். நமது மொழிமரபுப்படி, நடத்தை என்பது நன்னடத்தையைக் குறிக்கும்.

தமிழ்நாட்டில் காலங்காலமாக நிலவிவந்த குருகுலக்கல்வி முறை, ஆங்கிலேயர் ஆட்சிநிலை பெற்றதைத் தொடர்ந்து பல மாற்றங்களுக்கு உள்ளாயிற்று. மடங்களிலும், ஆதீனங்களிலும் சிறைபட்டிருந்த கல்வித்துறை, அவற்றிலிருந்து விடுபட்டு நிறுவனங்களின் மூலம் வளர்ச்சி அடையலாயிற்று. ஒரு சிலரின் உரிமையாக இருந்த கல்வியென்னும் ஒளி பேரொளியாகி, பொதுமக்களின் மத்தியில் பரவலாயிற்று. அறியாமை இருள் அகன்று நாம் அறிவு ஒளிபெற வேண்டுமாயின் கல்வி மிகமிக அவசியமானது. மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கல்வி தேவையான ஒன்றாகும். மனிதனுக்குப் பலவகை அழகு அமைந்து இருந்தாலும், 'கல்வி அழகே அழகு' என்பர். கல்வியின் அவசியத்தை அலைவாய்க்கரையில், சேற்றில் மனிதர்கள், மாறி மாறிப்பின்னும், உத்தரகாண்டம் போன்ற புதினங்களின் வாயிலாக ஆசிரியர் விளக்குகிறார்.

'அலைவாய்க்கரையில்' என்ற புதினத்தில், மரியானின் நண்பன் நசரேன். இவள் படித்த பெண்ணைத் திருமணம் செய்துகொண்டான். வாகனத்தை ஓட்டிச் செல்கிறாள். நசரேன் கோட் சூட்டுப் போட்டுக்கொண்டு ஆங்கிலம் பேசுகிறான். இவ்வாறெல்லாம் ஆல்பர்ட்டும் சாமுவேலும் பேசுகின்றனர். இதைக்கேட்ட மரியான், நெஞ்சில் கிளர்ந்த உணர்ச்சியை விழுங்கிக் கொள்கின்றான். பரதவர் இனத்தில் பிறந்த இவன், படிப்பறிவு இன்மையால் வறுமையால் வாழ்க்கையில் உண்டாகும் துன்பத்தைக் கண்டு வருந்துகிறான். இதனை,

"அவர்கள் பேசுவதைக் கேட்கையில், வாழ்க்கையில் முன்னேற்றம் காணப் படிப்பும் வெளியுலக அனுபவமும் எவ்வளவுக்குத் தேவை என்று மரியானுக்கு உறைக்கிறது. தங்களுக்கு எதிர்காலம் என்னவாயிருக்குமோ என்ற நினைப்பில் பெருமூச்செறிகிறான். வலை, மரம் எல்லாம் போய் என்ன செய்வார்கள்."4 என்று குறிப்பிடு கிறார்.

மரியான் கடல்பாடு இல்லாத சமயத்தில், நிலத்தில் வாழைத்தோப்பு வைத்து வேலை செய்கிறான். கடல் தொழிலால் சிக்கல் ஏற்படும்பொழுது அதனைத் தாக்கும் வாயிலாக ஆசிரியர் இத்தீவை அமைத்துள்ளார். இதனையே,

"அவன் சாலையோரம் அடர்ந்த அகத்தி மரங்களின் பின்னணியில் சீராக நடவு செய்யப் பெற்றிருக்கும் வாழைக் கன்றுகளைப் பார்க்கிறான். நாகர்கோயில் விவசாய ஆபீசில் எட்டுமாசத்தில் குலை தள்ளிவிடும் என்று சொன்னார்கள். நிலம் பண்படுத்தி வாங்கி வைத்து, அவனும் சம்முவமுமே வேலை செய்திருக்கின்றனர்."5 என்று குறிப்பிடுகின்றார்.

விவசாயக் குடியில் பிறந்த சம்முகத்தின் மகள் காந்தி, மேற்படிப்புப் படிக்க விரும்புகிறாள். இவர்கள் படிப்புக்காக விசாரிக்கும் பொழுது ரூபாய் இரண்டாயிரம் தொகையைக் கல்வி நிறுவனத்தார் நன்கொடையாகக் கேட்கின்றனர். உழவுத்தொழில் செய்து வாழும் இம்மக்களால் எவ்வாறு இத்தொகையைக் கொடுக்கமுடியும்? இதனால் காந்தியால் மேற்படிப்புப் படிக்க இயலாத நிலை ஏற்படுகின்றது. கல்வி கற்க இயலாத நிலை அவளை வருத்தமடையச் செய்கிறது. இதனை,

"அதனாலே, சம்முகம், உங்க மகள் ஓர் அதிர்ஷ்டப் பாதையில் கால் வைக்க அனுமதி கிடைச்சாச்சு. நீங்க ஓர் இரண்டாயிரம் முதலில் கட்டிடணும்.... திக்கென்று கண்ணாடிக் குண்டைத் தம்மீது எறிந்து விட்டாற்போல் அவர் அதிர்ச்சியுறுகிறார். 'உங்க மகளில்ல யார் செலக்ஷன் ஆகும் மாணவியாராக இருந்தாலும் டொனேஷன் கட்டணும் என்று விதி'6 என்றவுடன், காந்திக்குக் கண்ணாடிக்குண்டு சிதில்சிதிலாக வெடித்து விழுந்தாற்போலிருந்தது. ஏழை விவசாயி அவ்வளவு தொகையை எப்படி கொடுக்க முடியும்? கல்வி கற்கும் ஆர்வம் இருந்தும் பொருளாதாரமின்மையால் படிக்க இயலாத சூழல் உருவாகிறது என்பதை, 'சேற்றில் மனிதர்கள்' புதினத்தின் வாயிலாக விளக்குகிறார்.

காந்தி தன் வாழ்வில் துவண்டு விடவில்லை. அடித்தட்டு மக்களின் வாழ்க்கையைச் சீரழிக்கும் கயவர்களைச் சுட்டெரிக்கும் புரட்சிப் பெண்ணாகி நியாயத்துக்குப் போராடும் பேராற்றல் உடையவளாகக் காட்டுகிறார் ராஜம்கிருஷ்ணன்.

"நம் சமுதாய விடுதலைதான் முக்கியம்னு போராட வந்தோமே, அதே ஒரு வேகம் அவங்க கிட்ட இப்ப வந்திருக்கு...."7 என்று விளக்குகிறார்.

ரேவு எனும் ரேவதி ஒன்பதாம் வகுப்பிற்குமேல் படிக்கவில்லை. பெண் என்பவள், ஆணுக்கு அடங்கியவளாகவும் கணவன் சொல்வதை மட்டும் கேட்கக் கூடியவளாக இருக்க வேண்டும். மாடு போல் வீட்டில் உழைத்தாலும், தான் அந்நியப்பட்டு இருக்கின்றோமோ எனவும், நமக்கென்று சுயமரியாதை எதுவும் இவ்வீட்டில் இல்லையே எனும் கவலையும் ரேவுக்கு மேலிடுகின்றது. படித்திருந்தால் இந்நிலை மாறி, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வழி பிறந்திருக்கும் என்று தம்பி வேம்புவிடம் கூறி வருத்தப்படுகிறாள். இதனை 'மாறிமாறிப் பின்னும்' என்ற புதினத்தில்,

"இந்தக் கௌரவ நிழலைப் பற்றி எப்படி இவனுக்குப் புரியவைக்க?" இல்லைடா வேம்பு, நான் அப்ப எப்படியானும் படிச்சி ஒரு எஸ்.எஸ்.எல்.சி முடிச்சிருக்கணும் ஏதானும் வேலைக்குப்போய், என்னால் என்னைக் காப்பாற்றிக்க முடியும்னு ஆயிருக்கணும். கல்யாணம் என்னை இப்படி அடிமைச் சாசனம் பண்ணிக் கொடுக்க வேண்டாம்...

கல்யாணம் பண்ணிண்டாலும், அப்ப புருஷன் மதிப்பான். இப்ப சுதாவைப் பாரு, எவ்வளவு... பிரீயா இருக்கா? அவ புருஷன் அவளை எப்படி மதிக்கிறார் தாங்கறார்? அவர் பழகற விதமே மரியாதையாக இருக்கு. அவள் பகல் வேலை, ராவேலைன்னு போறா. ரெண்டு பேருக்கும் கர்வம் கிடையாது. அவாளும் எங்கோ வீடு கட்டிண்டு இருக்கா. காலி பண்ணிட்டா, வேறயார் வருவாளோ!..." என்று வருத்தமுற்ற ரேவு, அடிமை வாழ்க்கை தேவையில்லை என முடிவெடுத்து, வீட்டை விட்டு வெளியேறி, இயற்கையோடு இயைந்து வாழ்வதற்கும் மனநிம்மதி எய்துவதற்கும் முத்தாறு எஸ்டேட்டில் அமைந்துள்ள தேன்மலை பகுதிக்குச் செல்வதாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

## கல்வியின்மையின் ஏக்கம்

தாயம்மா வயதான காலத்திலும் தன்னம்பிக்கையும் நேர்மையான உள்ளமும் கொண்டவள். அதனால்தான், அஹிம்சை முறையில் வாழ்ந்த எஸ்.கே.ஆர் வீட்டில் வேலை செய்துவந்தாள். ஐயா இருந்த சமயத்தில் அவர் உரைத்த கல்வியின் முக்கியத்துவத்தை நினைத்துப் பார்க்கிறாள். குறிப்பாக, ஏழைப் பெண்கள் கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற அவரது எண்ணம் அவளை வியக்க வைக்கிறது. இதனை,

"தாயம்மா, நீ தகுந்த பேர வச்சிட்டு, இங்கே ஏழைப்பெண்கள் தொழிற்கூடம் எதானும் வைக்கணும். நான் உயிலில் எழுதி இருக்கிறேன். கடைசி வரையிலும் நீதான் இருந்து கவனிக்கணும்... ராதாம்மா பேரை வைத்து நடத்தணும். எங்கெங்கோ பெண் குழந்தைகளைக் கொல்லுறாங்களாம். அந்த அவநம்பிக்கையைக் கிள்ளி எறியனும்..." எனப் புதினத்தின் மூலம் குறிப்பிடுகிறார்.

## மூடத்தனம்

பண்டைய காலந்தொட்டுக் கல்வியை மிக இன்றியமையாததது என்று, 'உத்தர காண்டம்' சான்றோர்கள் வலியுறுத்தி வந்துள்ளனர். அறியாமை உள்ள மக்களிடம் அறிவு என்னும் புதிய சிந்தனை விளக்கை ஏற்றிட ஆண்டாண்டு காலமாகப் பல அறிஞர்கள் முனைந்து செயல்பட்டு வந்துள்ளனர். கல்வி என்பது ஒருவனின் சொத்தாகக் கருதப்படுகிறது.

சமூகத்தில் அக்கல்வியறிவு இன்மையால் இன்னல்கள் ஏற்படுவதோடு, அறியாமை எனும் மூடத்தனம் மனதில் ஏற்பட்டுவிடும். இதனால், கோழைத்தனம் உண்டாகும். மூர்க்கத்தனம் தோன்றி வாழ்வைச் சீரழித்துவிடும். சமூக வாழ்வைச் சித்திரிக்கும் புதினங்களின் வாயிலாக ராஜம்கிருஷ்ணன் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி சமூக முன்னேற்றத்திற்கு வழிகாட்டியிருக்கிறார்.

## முடிவுரை

சமூகப் புதினங்கள், சமுதாயச் சிக்கல்களை நுட்பமாக ஆராய்ந்து கூறுவதோடு அவற்றுக்குத் தீர்வும் காண்கின்றன. படைப்பாசிரியரின் ஆற்றலைப் பொருத்துப் புதினக்கலை வாழ்வின் எல்லாத் தத்துவங்களையும், நுட்பங்களையும் மையமாக்கிக் கொள்கின்றது. இத்தகு இலக்கியத்தின் நோக்கமே மனித சமுதாயத்தைப் புரிந்து கொள்வது எனலாம்.

புதின ஆசிரியர் காட்டும் ஒளியின் துணைகொண்டு படிப்போர் அக்குறிப்பிட்ட சமூகத்தினூடே வழி நடந்து சென்று உண்மையை உணர்கின்றனர். இதனால் சமூகப் புதினங்கள் சமூகத் துன்பத்தை வெளிக்காட்டுவதையும், துன்பப்படுவோர் மீது பரிவு கொள்ளச் செய்வதையும் காணமுடிகின்றது.

## References

Madurai Koodaloor Kizhar, Muthumozhikkanchi, Gowra Pathippakam, Chennai

Bharathidhasan, Thirukkural, Saratha Publisher, Chennai

Rajam Krishnan, Alaivay Karaiyil, Gowra Publication, Chennai

Rajam Krishnan, Setril Manitharkal, Thagam Publication, Chennai

Rajam Krishnan, (1996) Maarimaarippinnum, Thagam Publication, Chennai

Rajam Krishnan, (2002) Uthrakandam, Thagam Publication, Chennai

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License